**2018–ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 28ம் தேதி புதன்கிழமை காலை 11.00 மணிக்கு**
**கொமாரபாளையம் நகராட்சி சாதாரணக்கூட்டத்தின்**
**நிகழ்ச்சி நிரல்**
**முன்னிலை:– திருமதி. ரா.மகேஸ்வரி, பி.காம்., அவர்கள்.**
**தனி அலுவலர் மற்றும் நகராட்சி ஆணையாளர்**

---

<u>பொருள் எண்.1</u>

ஆணையாளர் அவர்களின் ஜனவரி – 2018 ம் மாதத்திய நாட்குறிப்பினை பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

பதிவு செய்யலாம்.

<u>பொருள் எண்.2</u>

இந்நகராட்சி ஒப்பந்ததாரர்கள் பட்டியலில் பிடித்தம் செய்யப்பட்ட வருமான வரித் தொகை கணக்குகள் தாக்கல் செய்தமைக்காக 2015–16 மற்றும் 2016–17ம் ஆண்டுகளுக்கும், 2014–15ம் ஆண்டு வருமான வரி வழக்கில் அப்பீல் செய்தமைக்கும் சேர்த்து மொத்தம் ரூ.20,500/–ஐ திரு.T.N.ராமச்சந்திரன், ஆடிட்டருக்கு தொகை வழங்க கூட்டப் பொருள் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு

அனுமதிக்கலாம்.

<u>பொருள் எண்.3</u>

கொமாரபாளையம் நகராட்சிக்கு சொந்தமான அலுவலக உபயோகத்திற்கு பயன் படுத்தப்பட்டு வரும் ஈப்பு வாகன எண். TN.34 X0576 வாகனத்தின் கண்ணாடியானது சூரிய ஒளிபட்டு அதிக வெப்பமாக இருப்பதால் வாகனத்தில் செய்து சிரமமான சூழ்நிலை இருந்து வருகிறது. இதனால் வாகன பாதுகாப்பு கருதி Sun Film Sticker ஒட்டுவது பாதுகாப்பாக இருக்கும் என தெரியப்படுகிறது. எனவே மேற்கண்ட வாகனத்திற்கான Sun Film Sticker வாங்க ஆகும் செலவின தொகை ரூ.2500./–க்கு தனி அலுவலரின் முன் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1. அனுமதி வழங்கலாம்.
2. மேற்கண்ட பணியாளர் அவசர அவசியம் கருதி உடனடியாக செய்ய வேண்டி இருப்பதால் தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணியினை மேற்கொள்ளவும் மேற்படி தொகையினை இந்நகராட்சி பொது நிதியில் இருந்து வழங்குவதற்கும் அனுமதி வழங்கலாம்.

<u>பொருள் எண்.4</u>

கொமாரபாளையம் நகராட்சிக்கு சொந்தமான ஈப்பு வாகன எண்.TN.34 X, 0576 வாகனத்தின் டயர்கள் 46000 கிலோ மீட்டருக்கு மேல் ஓடியுள்ளது. இதனால் டயர்கள் தேய்ந்து பழுது ஏற்படும் நிலையில் உள்ளதாலும், மேலும் பிரேக் அப்ளை செய்யும் பொழுது டயர்கள் வழுக்கும் தன்மையில் உள்ளதாலும், மேற்கண்ட வாகனத்தின் பாதுகாப்பு கருதி நான்கு டயர்கள் புதியதாக வாங்க வேண்டி யஅவசியமாககிறது. எனவே மேற்படி வாகனத்திற்கு புதிய நான்கு டயர்கள் வாங்க ஆகும் உத்தேச செலவின தொகை ரூ.27000/–க்கு தனி அலுவலரின் முன் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1. அனுமதி வழங்கலாம்.
2. மேற்கண்ட பணியின் அவசர அவசியம் கருதி உடனடியாக செய்ய வேண்டி இருப்பதால் தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணியினை மேற்கொள்ளவும் மேற்படி தொகையினை இந்நகராட்சி பொது நிதியில் இருந்து வழங்குவதற்கும் அனுமதி வழங்கலாம்.

<u>பொருள் எண்.5</u>

கொமாரபாளையம் நகராட்சிக்கு சொந்தமான ஈப்பு வாகன எண்.TN.34 X.0576 வாகனத்திற்கு புதியதாக டயர்கள் வாங்க அன்று விலைப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற விலைப்புள்ளிகளின் விவரங்களை கீழ் வருமாறு கூட்டப்பொருள் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் | விலைப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற மொத்த தொகை |
|---|---|---|
| 1. | Amman Tires opp to Gowri Theatre near Reliance petrol Bank Komarapalayam | Appollo :5850x4=23400<br>B,Tone :6950x4=27800<br>Michelin:7600x4=30400 |
| 2. | Sri Murugan Tyres 106. New Pallipalayam Road Komarapalayam | Appollo : 7750 x 4 = 31000<br>B,Tone : 5900 x 4 = 23600<br>Michelin: 7150 x 4 =28600 |
| 3. | Sri Bannarityres 16/55, Salem main Road, Komarapalayam | Appollo : 6000 x 4 =24000<br>D, Tone : 7100 x 4 = 30800<br>Michelin:7700 x 4 = 30800 |

அலுவலக குறிப்பு :

மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகளில் அம்மன் டயர்ஸ் கொமாரபாளையம் என்பவர் குறைவான தொகைக்கு விலைப்புள்ளியினை கொடுத்துள்ளார். மேலும் இவரது விலைப்புள்ளியின் விலை விபரம் உள்ளூர் மார்கெட் விலை விபரத்திற்கு ஏற்ப இருப்பதினால் அவரசு விலைப்புள்ளியினை ஏகற்கவும். அதற்கான தொகை ரூ. /– ஐ இந்நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும், மேற்கண்ட பணிக்கான பணி ஆணையினை வழங்க அனுமதி வழங்கலாம்.

<u>பொருள் எண்.6</u>

இந்நகராட்சியின் 2017–2018 ஆம் ஆண்டு திருத்திய வரவு செலவு திட்ட மதிப்பீடும் மற்றும் 2018–2019 ஆம் ஆண்டுக்கான உத்தேச வரவு செலவு திட்ட மதிப்பீடு மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு

மன்றம் ஒப்புததல வழங்கலாம்.

<u>பொருள் எண்.7</u>

நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் கடித ந.க.எண்.159402017/WB நாள்.9.1.2018ன்படி அனைத்து நகராட்சி ஆணையாளர்கள் மற்றும் நகராட்சி பொறியாளர்கள் அவர்களின் தொலைபேசி எண்களை CUG என்ற எளிய முறையில் இணைத்து எல்லோருடைய தொலைபேசி எண்களையும் பெறுவதற்கு புதியதாக சிம் கார்டுகளையும் Airtel நிறுவனத்தின் மூலம் மேற்கொள்ள மேற்படி தொலை தொடர்பு வசதி செய்யப்பட்டுள்ளது.

எனவே மேற்கண்ட இணைப்பிற்கான பிப்ரவரி 2018ம் மாத தொலைபேசி கட்டண ரூ.2164/—யை உடனடியாக Airtel நிறுவனத்திற்கு செய்த தனி அலுவலரின் அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1. அனுமதி வழங்கலாம்.
2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவரின் முன் அனுமதி சான்று மேற்கண்ட தொகையினை உடனடியாக செலுத்தவும் மேற்படி செலவினத்தை பொது நிதியிலிருந்து செலுத்தவும் அனுமதி வழங்கலாம்.

<u>பொருள் எண்.8</u>

கொமாரபாளையம் நகராட்சி பொதுமக்களின் பயன்பாட்டிற்காக மக்களவை உறுப்பினர் மேம்பாட்டுதிட்டம் 2017—2018 ஆம் ஆண்டிற்கான நிதியின் கீழ் மேற்கொள்ளவிருக்கும் பணிகளுக்கான பூமி பூஜை நடைபெறுவதை தொடர்ந்து மேற்படி பணிகள் தொடர்பான விபரங்களை 10 ''x10'' என்ற அளவில் பிளக்ஸ் பேனர்களில் பிரிண்ட் செய்து நகரின் 11 இடங்களில் வைப்பதற்கான உத்தேச செலவின தொகை ரூ.25,000/—க்கு தனி அலுவலரின் முன் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1. அனுமதி வழங்கலாம்.
2. மேற்படி பணிக்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.25,000/—க்கு அனுமதி வழங்கலாம், மேலும் மக்களவை உறுப்பினர் மேம்பாட்டு பணிகள் என்பதால் பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று உள்ளூர் விலைப்புள்ளிகள் பெற்று பணியினை மேற்கொண்டதாகும், மேற்படி செலவினத்தை இந்நகராட்சி பொதுநிதியில் இருந்து மேற்கொள்ளலாம் அனுமதி வழங்கலாம்.

<u>பொருள் எண்.9</u>

கொமாரபாளையம் நகராட்சி பொதுமக்களின் பயன்பாட்டிற்காக மக்களவை உறுப்பினர் மேம்பாட்டுதிட்டம் 2017—2018 ஆம் ஆண்டிற்கான நிதியின் கீழ் மேற்கொள்ளவிருக்கும் பணிகளுக்கான பூமி பூஜை நடைபெறுவதை தொடர்ந்து மேற்படி பணிகள் தொடர்பான விபரங்களை 10 ''x10'' என்ற அளவில் பிளக்ஸ் பேனர்களில் பிரிண்ட் செய்து நகரின் 11 இடங்களில் வைப்பதற்கான உத்தேச செலவின தொகை ரூ.25,000/—க்கு ஆணையாளர் மற்றும் தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஊள்ளூர் விலைப்புள்ளிகள் பெற்டறு பணியினை மேற்கொண்டதற்கு தனி அலுவலரின் தகவலிற்கு வைக்கப்பகடுகிறது.

பெறப்பட்ட விலைப்புள்ளிகள் விபரம்:

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் | தொகை |
|---|---|---|
| 1. | திருவாளர்கள் சூர்யா டிஜிட்டல் பிளக்ஸ் பிரிணிடில் கொமாரபாளையம் | 24,200/— |
| 2. | ஸ்ரீராஜாமணி டிஜிட்டல் பிளக்ஸ் பிரிண்டர் முதல் தளம் சக்தி காம்ப்ளக்ஸ் மேட்டூர் மெயின்ரோடு பவானி | 27,500/— |
| 3 | அம்மன் டிஜிட்டல் பிளக்ஸ் பிரிண்டர் மேட்டூர் ரோடு பவானி. | 25850/— |

அலுவலக குறிப்பு :

1. பெறப்பட்ட மூன்று விலைப் புள்ளிகளில் வ.எண்.1ல் கண்டுள்ள திருவாளர்கள் சூர்யா டிஜிட்டல் பிளக்ஸ் பிரிண்டர்ஸ், கொமாரபாளையம் அவர்களின் குறைந்த விலைப்புள்ளியினை ஏற்று பணியின் அத்தியாவிசிய அவசியத்தினை கருத்தில் கொண்டு பணி உத்திரவு வழங்கியமைக்கும், செலவின தொகை ரூ.24200/— பொது நிதியில் இருந்து வழங்கவும் அனுமதி வழங்கலாம்.

<u>பொருள் எண்.10</u>

கொமாரபாளையம் நகராட்சியின் 2018–2021 ஆம் ஆண்டிற்கான பேருந்து நிலையத்திற்குள் ஒலி பெருக்கி மூலம் வர்த்தக விளம்பரம் செய்து கொள்ளும் உரிமத்திற்கு 14.02.2018 அன்று நடைபெற்ற பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் கீழ்கண்ட ஏலதாரர்களின் உயர்ந்த கேள்வியை மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | பெயர் மற்றும் முகவரி | உயர்ந்த ஏலக் கேள்வித் தொகை (ஓராண்டிற்கு) | டெண்டர் கேள்வித் தொகை (ஓராண்டிற்கு) |
|---|---|---|---|
| 1 | திரு.டி.கே.பழனிசாமி, த/பெ கருப்பண்ணன், 2/164, பூலக்காடு, கணபதி நகர், குப்பாண்டபாளையம், கொமாரபாளையம். | 27500/– | –– |
| 2 | திரு.வி.சடையன், த/பெ வீரன், 847, அருவங்காடு, கல்லாங்காட்டு வலசு, கொமாரபாளையம். | 28000/– | –– |

அலுவலகக் குறிப்பு

மேற்கண்ட இரண்டு ஏலதாரர்களில் திரு.வி.சடையன், த/பெ வீரன் என்பவரின் உயர்ந்த ஏலக் கேள்வி தொகை 28000/– ஓராண்டிற்கானது 3 ஆண்டு சராசரி உரிமத் தொகையான 16918/–ஐ காட்டிலும், சென்ற ஆண்டு உரிமத் தொகை 17750/–ஐ காட்டிலும் கூடுதலாக உள்ளதால் மேற்படி ஏலதாரரின் உயர்ந்த ஏலக் கேள்வியை ஊர்ஜிதம் செய்ய தனி அலுவலரின் அனுமதி வேண்டி ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

<u>பொருள் எண்.11</u>

கொமாரபாளையம் நகராட்சியின் 2018–2021 ஆம் ஆண்டிற்கான வாரச்சந்தையில் கட்டணம் வசூல் செய்து கொள்ளும் உரிமத்திற்கு 14.02.2018 அன்று நடைபெற்ற பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் கீழ்கண்ட ஏலதாரர்களின் உயர்ந்த கேள்வியை மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | பெயர் மற்றும் முகவரி | உயர்ந்த ஏலக் கேள்வித் தொகை (ஓராண்டிற்கு) | டெண்டர் கேள்வித் தொகை (ஓராண்டிற்கு) |
|---|---|---|---|
| 1 | திரு.பி.மனோகரன், த/பெ ஆர்.பழனிசாமி, 44, கிழக்க் காலனி, மஞ்சுளா மில் வீதி, கொமாரபாளையம். | 355000/– | –– |
| 2 | திரு.ஆர்.சண்முகசுந்தரம், த/பெ ரங்கையன், 40, கதிரேசன் லைன், கொமாரபாளையம். | 354000/– | –– |
| 3 | திருமதி.எம்.அம்சராணி, க/பெ பி.மனோகரன், 41, கிழக்கு காலனி, கொமாரபாளையம். | –– | 322250/– |

அலுவலகக் குறிப்பு

மேற்கண்ட இரண்டு ஏலதாரர்கள் மற்றும் ஒரு ஒப்பந்தப்புள்ளிதாரரை விட திரு.பி.மனோகரன் த/பெ ஆர்.பழனிசாமி என்பவரின் உயர்ந்த ஏலத் தொகை ரூ.3,55,000/— ஓராண்டிற்கானது 3 ஆண்டு சராசரி உரிமத் தொகையான ரூ.240641/—ஐ காட்டிலும், சென்ற ஆண்டு உரிமத் தொகை ரூ.252473/—ஐ காட்டிலும் கூடுதலாக உள்ளதால் மேற்படி ஏலதாரரின் உயர்ந்த ஏலக் கேள்வியை ஊர்ஜிதம் செய்ய தனி அலுவலரின் அனுமதி வேண்டி ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

பொருள் எண்.12

இந்நகராட்சிக்குட்பட்ட அம்மன் நகர் மற்றும் நாராயண நகர் பகுதியில் நகராட்சி சாலையில் உள்ள ஆக்கிரமிப்புகள் அகற்றுவது சம்மந்தமாக சென்னை உயர்நீதி மன்றத்தில் ஏற்கனவே ஆறு வழக்குகள் தொடரப்பட்டு வழக்கு நிலுவையில் உள்ள நிலையில் தற்போது மேலும் கீழ்க்கண்ட விவரப்படி 13 வழக்குகள் தொடரப்பட்டுள்ளது.

| வ.எண். | பெயர் | சென்னை உயர் நீதிமன்ற வழக்கு எண் மற்றும் வருடம் |
|---|---|---|
| 1 | திருமதி.P.லட்சுமி பிரபா | W.P.No : 34892 / 2017 |
| 2 | திரு.K.S.பழனிசாமி | W.P.No : 34893 / 2017 |
| 3 | திரு. மாது சாரதா | W.P.No : 34894 / 2017 |
| 4 | திரு. இளங்கோ | W.P.No : 34895 / 2017 |
| 5 | திரு.P. ரமேஷ் | W.P.No : 34896 / 2017 |
| 6 | திருமதி.கமலா | W.P.No : 34897 / 2017 |
| 7 | திரு.N.சுந்தர்ராஜ் | W.P.No : 34898 / 2017 |
| 8 | திரு.முத்துசாமி | W.P.No : 34899 / 2017 |
| 9 | திரு.யுவராஜ் | W.P.No : 34900 / 2017 |
| 10 | திரு.கந்தசாமி | W.P.No : 34901 / 2017 |
| 11 | திருமதி.சரஸ்வதி | W.P.No : 34902 / 2017 |
| 12 | திரு.S.முத்துசாமி | W.P.No : 31787 / 2017 |
| 13 | திரு.திருலோகசந்திரன் | W.P.No : 31788 / 2017 |

மேற்படி ஏற்கனவே தொடரப்பட்டு நிலுவையில் உள்ள வழக்குகளுக்கு இந்நகரரட்சி சார்பாக திரு.T.M.பாபையா அரசு சிறப்பு வழக்கறிஞர் அவர்கள் வழக்குகளை நடத்தி வருகிறார். மேலும் தற்போது புதிதாக தொடரப்பட்டுள்ள 13 வழக்குகளை சென்னை உயர்நீதி மன்றத்தில் இந்நகராட்சி சார்பாக திரு.T.M.பாபையா அவர்களை ஏற்று நடத்தவும், மேலும் அம்மன் நகர் மற்றும் நாராயண நகர் ஆக்கிரமிப்புகள் சம்மந்தமாக சென்னை உயர்நீதி மன்றத்தில் தொடரப்படும் வழக்குகளுக்கு இந்நகராட்சி சார்பாக திரு.T.M.பாபையா அரசு சிறப்பு வழக்கறிஞர் அவர்களிடம் வழக்கினை ஒப்படைத்து ஏற்று நடத்தவும், இதற்காகும் செலவினத்தினை வழங்கவும், மேலும் மேற்கண்ட 13 வழக்குகளுக்கு வழக்கு கட்டணம் ரூ 10000/— வீதம் ஆக மொத்தம் ரூ 130000/— ஐ வழங்குவதற்கு தனி அலுவலரின் அனுமதி வேண்டி கூட்டப் பொருள் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

1. அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட 13 வழக்குகளுக்கும் அவசர அவசியத்தை கருத்தில் கொண்டு தனி அலுவலரின் முன் அனுமதி வேண்டி வழக்கு கட்டணம் திரு.T.M.பாபையா, அரசு சிறப்பு வழக்கறிஞர் , சென்னை உயர்நீதி மன்றம் அவர்களுக்கு ஒரு வழக்கிற்கு ரூ 10000/— வீதம் 13 வழக்குகளுக்கு ரூ 130000/— வழக்கு கட்டணம் வழங்கியமைக்கும் மன்றம் பார்வையிட்டு அங்கீகரிக்கலாம்.

பொருள் எண்.13

கொமாரபாளையம் நகராட்சி முதல் நிலை நகராட்சியாகும். இந்நகராட்சியின் மக்கள் தொகை 71594. இந்நகரின் குடிநீர் ஆதாரம் காவிரி ஆறு ஆகும். காவிரி ஆற்றுப் படுகையில் அமைந்துள்ள சுத்திகரிக்கப்படாத நீரேற்று நிலையத்திலிருந்து (Raw Water Pumping Station) குடிநீரை தலைமை நீரேற்று நிலையத்திற்கு ஏற்றி அங்கு சுத்திகரிப்பு செய்து (Clean Water) நகராட்சிப் பகுதியில் 8

இடங்களில் அமைந்துள்ள உயர்மட்ட மேல்நிலை குடிநீர் தொட்டிகள் மூலம் நகரப்பகுதிக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டுவருகிறது.

மேலும், இந்நகராட்சியில் குடிநீர் பணிகளுக்கென்று தனியாக பணியாட்கள் நியமனம் செய்யப்படவில்லை. எனவே, சுத்திகரிக்கப்படாத நீரேற்று நிலையம் (Raw Water), சுத்திகரிக்கப்பட்ட தலைமை நீரேற்று நிலையம் (Head Works) மற்றும் அனைத்து குடிநீர் நீர்த்தேக்கத் தொட்டிகள் அதனுடன் தொடர்புடைய விநியோக குழாய்கள் ஆகியவற்றை சுகாதாரப் பணியாளர்களை கொண்டு பராமரிப்பு செய்யப்பட்டு வருகிறது. எனவே, நகராட்சி நிர்வாக குடிநீர் வழங்கல் துறை (ந.நி.3) அரசாணை (ந.நி) எண்.69, நாள்.4.5.1998ன்படி நகராட்சி சேவைப்பணிகள் தனியார் மயமாக்கல்' வழி காட்டல் நெறிப்படியும் மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலக க.எண்.69, நாள்.4.5.1998 வழிகாட்டியில் தெரிவித்துள்ளபடியும் தற்போது குடிநீர் நீர்த்தேக்கத் தொட்டிகள், சுத்திகரிக்கப்படாத நீரேற்று நிலையம், சுத்திகரிக்கப்பட்ட தலைமை நீரேற்று நிலையம் ஆகியவற்றை பராமரிக்கவும், குடிநீர் விநியோகக் குழாய்கள் மற்றும் நீரேற்று குழாய்களில் ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் கவனிக்கவும், சுத்திகரிப்பு நிலையத்தில் உள்ள விரைவு மணல் வடிகட்டியினை அடிக்கடி சுத்தம் செய்து, சுத்தமான குடிநீரை பெறுவதற்கு தேவையான பணியாளர்கள் தேவையினை கருத்தில் கொண்டும், கோடைக்காலத்தில் குடிநீர் தட்டுப்பாடின்றி வழங்கிட அனைத்து மேல்நிலை தொட்டிகளுக்கும் பணியாளர்களை நியமித்து, கண்காணித்து குடிநீர் விநியோகம் செய்யவும் தேவையான பணியாளர்களை நியமித்து பணி மேற்கொள்ள ஆறு மாத காலத்திற்கு (01.04.2018 முதல் 30.09.2018 வரை) பராமரிப்பு பணிக்கு தேவைப்படும் கீழ்கண்ட ஆட்களுக்கு ஆகும் செலவுத் தொகை ரூ.11,15,000/—க்கு தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு தனி அலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு

1). மதிப்பீட்டுத் தொகை ரூ.11,15,000/—க்கு அனுமதி வழங்கலாம்.
2). இச்செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.

<u>பொருள் எண்.14</u>

இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் இயங்கி வரும் TATA Ace எண்.TN-34 S-3027க்கு தற்போது தகுதிச் சான்று முடிவடைவதால் நடப்பாண்டிற்கு தகுதிச் சான்று பெற தேவையான பழுது மற்றும் பராமரிப்பு பணிகளை ஓட்டுநர் குறிப்பிட்டுள்ள விபரப்படி பழுதுகளை சரி செய்யும் பணிக்கு உள்ளூர் பணிமனை உரிமையாளர்களிடமிருந்து பெறப்பட்ட விலை விபரத்தின் அடிப்படையில் ரூ.60,000/—க்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மேற்படி TN-34 S-3027 வாகனத்தினை நடப்பாண்டிற்கான தகுதிச் சான்றினை பெறுவதற்கு தேவையான பழுது மற்றும் பராமரிப்பு பணிகளை மேற்கொள்ளவும், மதிப்பீட்டுத் தொகை ரூ.60,000/—ஐ நகராட்சி பொது நிதியின் மூலம் மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.

<u>பொருள் எண்.15</u>

இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் இயங்கி வரும் வாகனம் எண்.TN-28 T-6271க்கு தற்போது தகுதிச் சான்று முடிவடைவதால் நடப்பாண்டிற்கு தகுதிச் சான்று பெற தேவையான பழுது மற்றும் பராமரிப்பு பணிகளை ஓட்டுநர் குறிப்பிட்டுள்ள விபரப்படி பழுதுகளை சரி செய்யும் பணிக்கு உள்ளூர் பணிமனை உரிமையாளர்களிடமிருந்து பெறப்பட்ட விலை விபரத்தின் அடிப்படையில் ரூ.1,75,000/—க்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மேற்படி TN-28 T-6271 வாகனத்தினை நடப்பாண்டிற்கான தகுதிச் சான்றினை பெறுவதற்கு தேவையான பழுது மற்றும் பராமரிப்பு பணிகளை மேற்கொள்ளவும், மதிப்பீட்டுத் தொகை ரூ.1,75,000/—ஐ நகராட்சி பொது நிதியின் மூலம் மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம். மேலும், பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரி பணியினை மேற்கொண்டதற்கும் அனுமதி வழங்கலாம்.

<u>பொருள் எண்.16</u>

இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் இயங்கி வரும் டம்பர் பிளேசர் வாகனம் எண்.TN-34 R-3431க்கு தற்போது தகுதிச் சான்று முடிவடைவதால் நடப்பாண்டிற்கு தகுதிச் சான்று பெற தேவையான பழுது மற்றும் பராமரிப்பு பணிகளை ஓட்டுநர் குறிப்பிட்டுள்ள விபரப்படி பழுதுகளை சரி செய்யும் பணிக்கு உள்ளூர் பணிமனை உரிமையாளர்களிடமிருந்து பெறப்பட்ட விலை விபரத்தின் அடிப்படையில் ரூ.90,000/—க்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மேற்படி TN-34 R-3431 வாகனத்தினை நடப்பாண்டிற்கான தகுதிச் சான்றினை பெறுவதற்கு தேவையான பழுது மற்றும் பராமரிப்பு பணிகளை மேற்கொள்ளவும், மதிப்பீட்டுத் தொகை ரூ.90,000/—ஐ நகராட்சி பொது நிதியின் மூலம் மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம். மேலும், பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரி பணியினை மேற்கொண்டதற்கும் அனுமதி வழங்கலாம்.

<u>பொருள் எண்.17</u>

கொமாரபாளையம் நகராட்சியில் கீழ்க்கண்ட பணிகளை செய்ய **09.02.2018**ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் முதல் அழைப்பில் வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்பு நோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு கூட்டத்தின் அனுமதிக்கும் பார்வைக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப் பீட்டுத் தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி வழங்கிய ஒப்பந்ததாரர் விபரம் | மதிப்பீட்டு சதவீதம் குறைவு / கூடுதல் |
|---|---|---|---|---|
| | <u>பொது நிதிப் பணிகள்</u> | | | |
| **1.** | பொது சுகாதாரப் பிரிவில் பயன்படுத்தி வரும் பழுதான தள்ளுவண்டிகளை பழுது பார்த்தல். | **1,25,000/—** | திருவாளர்கள். ஸ்ரீபாக்யலட்சுமி மோட்டார் ஒர்க்ஸ், ஈரோடு.<br><br>திருவாளர்கள். அம்மாபேட்டை ஆக்ரோ இன்ஜினியரிங் அன்ட் சர்வீஸ் கோ—ஆப் சென்டர் லிட்., அம்மாபேட்டை | ஒப்பந்தத் தொகை ரூ.1,22,450/—<br><br>ஒப்பந்தத் தொகை ரூ.1,24,575/— |
| | <u>குடிநீர் நிதிப் பணிகள்</u> | | | |
| **2.** | கொமாரபாளையம் நகராட்சிக்குத் தேவையான P.V.C. மற்றும் G.I. குழாய்கள் மற்றும் அதன் உதிரி பாகங்கள் சப்ளை செய்தல். | **4,95,000/—** | திருவாளர்கள். எஸ்.ஏ.சக்கரபாணி அன்ட் சன்<br><br>திரு.கே.எஸ்.மாரியப்பன் | மதிப்பீட்டுத் தொகையினைவிட **1.17 %** குறைவு.<br><br>மதிப்பீட்டுத் தொகையினைவிட **2.63 %** அதிகம். |
| **3.** | வார்டு எண்.7 சத்தியாபுரி பகுதியில் ஏற்கனவே உள்ள ஆழ்துளை கிணற்றில் புதியதாக நீர்மூழ்கி மின்மோட்டார் இறக்கி, அருகிலேயே ஆர்.சி.சி.கான்கிரீட்டிலான மோட்டார் அறையுடன் கூடிய மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி கட்டி தண்ணீர் வசதி செய்தல். | **4,50,000/—** | திரு.சி.லோகநாதன்<br><br>திரு.பி.சின்னண்ணன் | மதிப்பீட்டுத் தொகையினைவிட **0.30 %** குறைவு.<br><br>மதிப்பீட்டுத் தொகையினைவிட **1.03 %** அதிகம். |

| | | | | |
|---|---|---|---|---|
| 4. | கொமாரபாளையம் நகராட்சிக்கு நீர்முழ்கி மின்மோட்டார்கள் சப்ளை செய்தல். | 4,96,000/– | திருவாளர்கள். எஸ்.ஏ.சக்கரபாணி அன்ட் சன்<br><br>திரு.கே.எஸ்.மாரியப்பன் | மதிப்பீட்டுத் தொகையினைவிட **0.06 %** குறைவு.<br><br>மதிப்பீட்டுத் தொகையினைவிட **0.35 %** அதிகம். |
| 5. | நகராட்சி எல்லைக்குட்பட்ட குடிநீர் விநியோக வால்வு தொட்டிகளை பழுது பார்த்து புதிதாக மேல்மூடி அமைத்து பராமரித்தல். | 1,90,000/– | திரு.கே.எஸ்.மாரியப்பன்<br><br>திருவாளர்கள். எஸ்.ஏ.சக்கரபாணி அன்ட் சன் | மதிப்பீட்டுத் தொகையினைவிட **0.16 %** குறைவு.<br><br>மதிப்பீட்டுத் தொகையினைவிட **1.56 %** அதிகம். |
| 6. | வார்டு எண்.29 அவ்வை மூதாட்டி வீதியில் உள்ள பொது கழிப்பிடத்திற்கு புதியதாக ஆழ்துளை கிணறு அமைத்து தண்ணீர் வசதி செய்தல். | 1,20,000/– | திரு.கே.எஸ்.மாரியப்பன்<br><br>திருவாளர்கள். எஸ்.ஏ.சக்கரபாணி அன்ட் சன் | மதிப்பீட்டுத் தொகையினைவிட **0.36 %** குறைவு.<br><br>மதிப்பீட்டுத் தொகையினைவிட **1.13 %** அதிகம். |
| 7. | வார்டு எண்.2 ராஜராஜன் நகர் பகுதியில் புதியதாக ஆழ்துளை கிணறு அமைத்து நீர்மூழ்கி மின்மோட்டர் இறக்கி, மோட்டார் அறை கட்டி HDPE தொட்டி அமைத்து தண்ணீர் வசதி செய்தல். | 3,80,000/– | திரு.கே.எஸ்.மாரியப்பன்<br><br>திருவாளர்கள். எஸ்.ஏ.சக்கரபாணி அன்ட் சன் | மதிப்பீட்டுத் தொகையினைவிட **0.31 %** குறைவு.<br><br>மதிப்பீட்டுத் தொகையினைவிட **1.08 %** அதிகம். |

அலுவலகக் குறிப்பு

முதல் அழைப்பில் வரபெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு தொகையைவிட குறைவான சதவிகிதம் கொடுத்துள்ள ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்கலாம்.

<u>பொருள் எண்.18</u>

கொமாரபாளையம் நகராட்சியில் கீழ்க்கண்ட பணிகளை செய்ய 27.02.2018ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் முதல் அழைப்பில் வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்பு நோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு கூட்டத்தின் அனுமதிக்கும் பார்வைக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப் பீட்டுத் தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி வழங்கிய ஒப்பந்ததாரர் விபரம் | மதிப்பீட்டு சதவீதம் குறைவு / கூடுதல் |
|---|---|---|---|---|
| | <u>பொது நிதிப் பணிகள்</u> | | | |
| 1. | இந்நகராட்சிக்கு சொந்தமான JCB வாகனம் TN-34 R-1914-க்கு தகுதியான அனுபவமிக்க உரிமம் பெற்ற ஓட்டுநர் ஒருவரை சப்ளை செய்யும் பணி. (01.03.2018 முதல் 31.08.2018 வரை) | 1,12,000/– | திரு.கே.எஸ்.மாரியப்பன்<br><br>திருவாளர்கள். எஸ்.ஏ.சக்கரபாணி அன்ட் சன் | மதிப்பீட்டுத் தொகையினைவிட **0.17 %** குறைவு.<br><br>மதிப்பீட்டுத் தொகையினைவிட **1.67 %** அதிகம். |

| | | | | |
|---|---|---|---|---|
| 2. | பொது சுகாதாரப் பிரிவு வாகனம் TATA Ace எண்.TN-34 S-3027க்கு தகுதிச்சான்று பெறுவதற்காக வாகனத்தின் பழுதுகளை சரி செய்தல். | 60,000/– | திருவாளர்கள். லட்சுமி ஆட்டோ டீசல் ஒர்க்ஸ், மேட்டூர் அணை.<br><br>திருவாளர்கள். ஸ்ரீ ஜோதி முருகன் மோட்டார் ஒர்க்ஸ், சேலம். | ஒப்பந்தத் தொகை ரூ.59,826/–<br><br>ஒப்பந்தத் தொகை ரூ.60,135/– |
| 3. | பொது சுகாதாரப் பிரிவு JCB வாகனம் எண்.TN-34 R-1914 வாகனத்தின் பழுதுகளை சரி செய்யும் பணி. | 30,000/– | திருவாளர்கள். லட்சுமி ஆட்டோ டீசல் ஒர்க்ஸ், மேட்டூர் அணை.<br><br>திருவாளர்கள். ஸ்ரீ ஜோதி முருகன் மோட்டார் ஒர்க்ஸ், சேலம். | ஒப்பந்தத் தொகை ரூ.29,902/–<br><br>ஒப்பந்தத் தொகை ரூ.30,350/– |
| 4. | பொது சுகாதாரப் பிரிவு டம்பர் பிளேசர் வாகனம் எண்.TN-34 R-3431க்கு தகுதிச்சான்று பெறுவதற்காக வாகனத்தின் பழுதுகளை சரி செய்தல். | 90,000/– | திருவாளர்கள். லட்சுமி ஆட்டோ டீசல் ஒர்க்ஸ், மேட்டூர் அணை.<br><br>திருவாளர்கள். ஸ்ரீ ஜோதி முருகன் மோட்டார் ஒர்க்ஸ், சேலம். | ஒப்பந்தத் தொகை ரூ.89,911/–<br><br>ஒப்பந்தத் தொகை ரூ.90,575/– |
| 5. | பொது சுகாதாரப் பிரிவு வாகனம் எண்.TN-28 T-6271க்கு தகுதிச்சான்று பெறுவதற்காக வாகனத்தின் பழுதுகளை சரி செய்தல். | 1,75,000/– | திருவாளர்கள். லட்சுமி ஆட்டோ டீசல் ஒர்க்ஸ், மேட்டூர் அணை.<br><br>திருவாளர்கள். ஸ்ரீ ஜோதி முருகன் மோட்டார் ஒர்க்ஸ், சேலம். | ஒப்பந்தத் தொகை ரூ.1,74,868/–<br><br>ஒப்பந்தத் தொகை ரூ.1,76,005/– |

அலுவலகக் குறிப்பு

முதல் அழைப்பில் வரபெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு தொகையைவிட குறைவான சதவிகிதம் கொடுத்துள்ள ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்கலாம். மேலும், மேற்காணும் பணிகளின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதற்கும், பணியினை மேற்கொண்டதற்கும் அனுமதி வழங்கலாம்.

<u>பொருள் எண்.19</u>

கொமாரபாளையம் நகராட்சி அலுவலக உபயோகத்திற்கு 2018–2019ம் ஆண்டிற்கு தேவையான படிவங்கள், பதிவேடுகள், எழுது பொருட்கள் போன்றவைகளை அவ்வப்பொழுது ஈரோடு மாவட்ட பெண்கள் எழுது பொருட்கள் அச்சுக்கூட மற்றும் தையல் தொழிலாளர்கள் தொழில் கூட்டுறவு சங்கம் (லிட்) No.1312 தேவைக்கேற்ப வாங்கிக் கொள்வதற்கு உத்தேச செலவினம் ரூ.5.00 இலட்சத்திற்கு கூட்டப் பொருள் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்.

பொருள் எண்.20

கொமாரபாளையம் நகராட்சி அலுவலக உபயோகத்திற்கு 2018–2019 ம் ஆண்டிற்கு தேவையான கணினி டோனர்கள், CD, DVD, TVS Catrage Ribbon போன்றவைகளை விலைப்புள்ளி பெற்று அவ்வப்பொழுது தேவைக்கேற்ப வாங்கிக் கொள்வதற்கு உத்தேச செலவினம் ரூ.3.00 இலட்சத்திற்கு கூட்டப் பொருள் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு
மன்றம் அனுமதிக்கலாம்.

பொருள் எண்.21

இந்நகராட்சிக்குட்பட்ட பல பகுதிகளில் TURIP–2017–18 நிதியின்கீழ் சாலைப் பணிகள் தற்போது துவங்கப்பட்டு நடைபெற்று வருகிறது. இச்சாலைப் பணிகள் நடைபெற்று வருகிறது. இச்சாலைப் பணிகள் நடைபெற்று வரும் பகுதிகளில் பல இடங்களில் குடிநீர் அல்லாத தண்ணீர் தேவைக்கென போடப்பட்டுள்ள குழாய்கள் முற்றிலும் சேதமடைந்துவிட்டபடியால், அப்பகுதி மக்கள் மிகுந்த சிரமத்திற்குள்ளாகின்றனர். மேலும், வார்டு எண்.4 கணபதி நகர், வார்டு எண்.5 கம்பன் நகர், வார்டு எண்.7 சத்யாபுரி கழிப்பிடம், வார்டு எண்.11 தினசரி சந்தை கழிப்பிடம் வார்டு எண்.15 சுள்ளிமடைத்தோட்டம் கழிப்பிடம் ஆகிய இடங்களில் வைக்கப்பட்டுள்ள Sintex தொட்டிகள் பழுதடைந்து தண்ணீர் அதிகளவில் வெளியேறி வருகிறது. எனவே, பழுதடைந்துள்ள உப்பு தண்ணீர் குழாய்களை மாற்றவும், பழுதடைந்துள்ள Sintex தொட்டிகளை மாற்றி புதிய தொட்டிகள் வாங்கிப் பொருத்தவும் ஆகும் செலவினம் ரூ.3,20,000/–க்கு அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு
1). மதிப்பீட்டுத் தொகை ரூ.3,20,000/–க்கு அனுமதி வழங்கலாம்.
2). இச்செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.

பொருள் எண்.22

இந்நகராட்சிக்கு சொந்தமான பேருந்து நிலைய வளாகத்தில் மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி ஒன்று உபயோகத்தில் உள்ளது. இத்தொட்டி கடந்த 1989 ஆம் ஆண்டு கட்டப்பட்டு, சுமார் 30 வருடங்களாக மக்கள் பயன்பாட்டில் இருந்து வருகிறது. இந்நிலையில், மேற்சொன்ன தொட்டியை சுற்றிலும் உள்ள சுற்றுச்சுவர் மற்றும் அதன் நுழைவு வாயில் Gate சேதமடைந்து, தொட்டி பாதுகாப்பற்ற நிலையில் உள்ளது. எனவே, சேதமடைந்துள்ள சுற்றுச்சுவரை புதிதாக கட்டி புதிய நுழைவு வாயில் Gate–ஐ வைத்து தொட்டியை பாதுகாத்திட தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.1,30,000/–க்கு அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு
1). மதிப்பீட்டுத் தொகை ரூ.1,30,000/–க்கு அனுமதி வழங்கலாம்.
2). இச்செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.

பொருள் எண்.23

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.2 அய்யம்பாளையம் பகுதியில் ஒரு ஆழ்துளைக் கிணறுடன் கூடிய கைபம்பு நிறுவப்பட்டு பொதுமக்களின் குடிநீர் அல்லாத தண்ணீர் தேவைக்காக பயன்பாட்டில் இருந்து வருகிறது. இந்நிலையில் அப்பகுதி மக்கள், தங்களுக்கு மேற்சொன்ன ஆழ்துளை கிணற்றில் மின் மோட்டார் இறக்கி அருகிலேயே Sintex தொட்டி வைத்து தண்ணீர் வசதி செய்து தரக்கோரி மனு அளித்துள்ளனர். எனவே, மேற்சொன்ன இடம் நேரில் ஆய்வு செய்யப்பட்டது. மேலும், கோடைக்காலம் நெருங்கி வருவதாலும், குடிநீரின் முக்கியத்துவத்தையும் கருத்தில் கொண்டு, Sintex தொட்டி அமைத்து, மின் மோட்டார் இறக்கி பொது மக்களுக்கு தண்ணீர் வசதி செய்து தர தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.3,50,000/–க்கு அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு
1). மதிப்பீட்டுத் தொகை ரூ.3,50,000/–க்கு அனுமதி வழங்கலாம்.
2). இச்செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.

<u>பொருள் எண்.24</u>

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். வார்டு எண்.9 கதிரேசன் வீதி (முருகன் தியேட்டர் அருகில்) சிறுபாலம் மற்றும் மழைநீர் வடிகால் பழுதடைந்த நிலையில் உள்ளதால், மழைநீர் வடிகாலில் கழிவுநீர் தேங்கி சுகாதார சீர்கேடு ஏற்படும் வகையில் உள்ளது. எனவே, மேற்சொன்ன இடத்தினை நேரில் ஆய்வு செய்யப்பட்டு புதியதாக சிறுபாலம் மற்றும் மழைநீர் வடிகால் கட்ட தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ.1,80,000/—க்கு அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு

1). மதிப்பீட்டுத் தொகை ரூ.1,80,000/—க்கு அனுமதி வழங்கலாம்.
2). இச்செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.

தனி அலுவலர் (மற்றும்)
ஆணையாளர்,
கொமாரபாளையம் நகராட்சி.

2018–ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 14ம் தேதி புதன்கிழமை காலை 11.00 மணிக்கு
கொமாரபாளையம் நகராட்சி அவசரக் கூட்டத்தின்
நிகழ்ச்சி நிரல்
முன்னிலை:– திருமதி. ரா.மகேஸ்வரி, பி.காம்., அவர்கள்.
தனி அலுவலர் மற்றும் நகராட்சி ஆணையாளர்

பொருள் எண்.1

மறுவரையறைஆணையம், தமிழ்நாடுஅவர்களின் கடிதம் ந.க.எண் 3174/2017/தேபொ1 நாள் 19.10.2017, 07.12.2017, 13.12.2017 ஆகியவற்றில் தெரிவித்துள்ள வழிகாட்டுதல் படி கொமாரபாளையம் நகராட்சி வார்டுகளுக்கு வரைவு மறுவரையறை கருத்துருக்கள், படிவங்கள் மற்றும் வரைபடங்கள் ஆகியனதயார் செய்யப்பட்டு, நகர்மன்றதீர்மான எண்.378 நாள் 14.12.2017ல் நகர்மன்றத்தின் ஒப்புதல் பெறப்பட்டது வரைவு மறுவரையறை உத்தேசங்கள் மாநிலதேர்தல் ஆணையம், சென்னை அவர்களிடம் ஒப்புதல் பெறப்பட்டு, பொதுமக்களின் பார்வைக்கு வைக்கப்பட்டது. வரைவுமறு வரையறை உத்தேசங்கள் தொடர்பாக ஆட்சேபனைகள் மற்றும் ஆலோசனைகள் பொதுமக்கள் மற்றும் அரசியல்கட்சிகளிடமிருந்து 22 எண்ணிக்கை வரப்பெற்றது. ஆட்சேபனைகள் மற்றும் ஆலோசனைகள் தொடர்பான மண்டல வாரியான கூட்டம் 10.02.2018 அன்று நடைபெற்றது. வரப்பெற்றஆட்சேபனைகள் மற்றும் ஆலோசனைகளில் வார்டு எண்.3ல் அய்யம்பாளையம் ஒரு பகுதியினை சேர்ப்பது, வார்டு எண்.22ல் மேற்குகாலனி ஒரு பகுதியினை சேர்ப்பது, வார்டு எண்.13ல் விட்டலபுரி தெரு எண்.6, 7, 8, விட்டலபுரி வீதிகளை சேர்ப்பது, வார்டு எண்.14ல் விட்டலபுரி தெரு எண்.1,2,4, எல்லப்பன்ரோடு, முனியப்பன் கோவில் வீதி, கதிரேசன் வீதி சேர்ப்பது என மொத்தம் 10 கோரிக்கைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டது. பிற 9 இனசுழற்சி தொடர்பான கோரிக்கை மற்றும் 3 கோரிக்கைகள் அரசுவழிகாட்டுதலுக்கு முரணாக இருந்ததால் நிராகரிக்கபட்டது. தற்போது மாற்றியமைக்கப்பட்ட உத்தேசங்கள் உறுப்பினர் செயலர், மறுவரையறை ஆணையம், சென்னைஅவர்களின் கடிதம் ந.க.எண் 3174/2017/ஈஜி/1. நாள் 31.01.2018–ம் தேதியகடிதத்தில் தெரிவித்துள்ள உரிய வழிகாட்டுதலின்படிதயார் செய்யப்பட்டுள்ளது. கொமாரபாளையம் நகராட்சியின் 33 வார்டுகளுக்கான மறுவரையறை கருத்துருக்கள் மற்றும் வரைபடங்கள் தயார் செய்யப்பட்டு தனிஅலுவலரின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

தனிஅலுவலர் அனுமதிக்கலாம்.

பொருள் எண்.2

அரசு ஆணை எண். (டி) 492 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.19.09.2013ன்படி 2013–14 ஆம் ஆண்டிற்கான ஒருங்கிணைந்த நகர்புர வளர்ச்சி திட்டத்தில் குடிநீர் விநியோக திட்டத்தில் புனரமைப்பு மற்றும் அபிவிருத்தி பணிகளை மேற்கொள்ள ரூ.1720.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்து நிதி ஒதுக்கீட்டில் ரூ.1548.00 இலட்சம் IUDM திட்டத்தின் மான்யமாகவும் ரூ.172.00 இலட்சம் நகராட்சியின் பங்குத் தொகை எனும் நிதி பங்களிப்பின்படி மான்யத் தொகையினை மூன்று ஆண்டு காலத்தில் மான்யத் தொகையினை விடுவிக்கும் வகையில் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது.

மேற்படி திட்ட நிதி ஒதுக்கீட்டின்படி இரண்டு சிப்பங்களாக கீழ்கண்டவாறு பணிகள் தேர்வு செய்யப்பட்டது.

| | | |
|---|---|---|
| 1. | சிப்பம்–1 குடிநீர் விநியோக திட்டத்தில் புனரமைப்பு மற்றும் அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ளும் பணி. | ரூ.1465.00 இலட்சம் |
| 2. | சிப்பம்–2 குடிநீர் விநியோக திட்டத்தினை கண்காணித்து கட்டுப்படுத்தி கையாளுதல் பணி (SCADA Arrangements) | ரூ.255.00 இலட்சம் |
| | மொத்தம் | ரூ.1720.00 இலட்சம் |

மேற்கண்ட பணிகளுக்கு உரிய மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு தலைமைப் பொறியாளர், நகராட்சி நிர்வாக ஆணையரகம், சென்னை அவர்களின் செயல்முறை கடிதத்தின்படி தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டு மூன்றாவது ஒப்பந்தப்புள்ளி அழைப்பில் 5.12.2014ல் ஒப்பந்தப்புள்ளிகள்

வரப்பெற்றதில் M/s.சத்வா இன்ஜினியரிங் கன்ஸ்ட்ரக்சன் பிரைவேட் லிமிடெட், சென்னை எனும் ஒப்பந்ததாரரால் 14.96 % மதிப்பீட்டினைவிட கூடுதலாக ஒப்பந்தப்புள்ளியினை நகர்மன்றத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்டு ஒப்பந்ததாரருக்கு 6.08.2015ம் தேதியில் பணி ஆணை வழங்கப்பட்டது.

சிப்பம் 1–க்கான பணியில் அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீட்டில் கீழ்க்குறிப்பிட்டுள்ள பணிகள் மேற்கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது.

1. பழுதடைந்துள்ள குடிநீர் பகிர்மான குழாய்களை 25.48 கி.மீ. நீளத்திற்கு மாற்றி அமைத்தல்.
2. FCV/PRV/Diaphragm வால்வுகள் 10313 எண்ணிக்கைகள் பொருத்துதல்.
3. 10313 எண்ணிக்கைகள் குடிநீர் இணைப்புகளுக்கு MDPE குழாய் மற்றும் FCV–கள் பொருத்துதல்.
4. இரண்டு மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி (5.00 இலட்சம் லிட்டர் கொள்ளளவு) கட்டும் பணி.
5. குடிநீர் பிரதான உந்து குழாய்களை 3.70 கி.மீ. நீளத்திற்கு மாற்றும் பணி.
6. தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள மணல் வடிகட்டி மற்றும் பழுதடைந்த மோட்டார்களை மாற்றுதல் மற்றும் இதர பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளுதல்.

மேலும், IUDM–2013–14 திட்டத்தின்கீழ் 25.48 கி.மீ. நீளத்திற்கு மிகவும் பழுதடைந்த A.C., PVC மற்றும் C.I.குழாய்களை மாற்ற வழிவகை செய்யப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு பணிகள் நிறைவடைந்துள்ளது. மதிப்பீட்டில் தற்போது அமைக்கப்பட்டுள்ள குழாய்களை ஏற்கனவே உள்ள குழாய்களுடன் இணைக்கும் பொருட்டு interlink–க்குக்கான விலை விபரம் ஏதும் குறிப்பிடப்படவில்லை. சுமார் 330 இடங்களில் (குறுக்குத் தெருக்கள் உட்பட) ஏற்கனவே உள்ள PVC, A.C., C.I., மற்றும் D.I. குழாய்களுடன் தற்போது புதிதாக பதிக்கப்பட்டுள்ள குழாய்கள் இணைக்கப்பட்டுள்ளது. எனவே, மதிப்பீட்டில் வழிவகை செய்யப்படாமல் உள்ள interlink–க்குக்கான DATA தயார் செய்யப்பட்டு அதற்கான மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. (நகல் இணைக்கப்பட்டுள்ளது)

இந்நிலையில் குடிநீர் மேம்பாட்டுத் திட்டப் பணி தற்போது முடிவுறும் நிலையில் உள்ளது. இப்பணியில் மதிப்பீட்டில் வழிவகை செய்யப்படாத இனங்களில் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது. அதன் விபரம் பின்வருமாறு.

1. சிறுபாலங்களை குடைந்து குழாய்கள் பதித்தல்
2. புதிய பகிர்மானம் மற்றும் நீரேற்று குழாய்களை பழைய பகிர்மானம் மற்றும் நீரேற்று குழாய்களுடன் இணைத்தல் (Labour Charge only)
3. புதிய பகிர்மானம் மற்றும் நீரேற்று குழாய்களை பழைய பகிர்மானம் மற்றும் நீரேற்று குழாய்களுடன் இணைத்து வால்வுகள் பொருத்தும் பணி (Materials)

மேற்கூரிய பணிகளை செய்து முடிக்க ஆகும் செலவினம் ரூ.55,63,760/– மற்றும் ஏற்கனவே செய்யப்பட்டுள்ள செலவினம் ரூ.46,68,228/–க்கும் சேர்த்து மொத்தம் ரூ.1,02,31,988/–க்கு செலவினம் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது. இத்தொகையானது மதிப்பீட்டுத் தொகையான ரூ.14,90,71,024/– ஐவிட 6.90 சதவீதம் மட்டுமே கூடுதலாக உள்ளது. எனவே, மேற்கூரிய பணிகளை செய்து முடிக்க மதிப்பீட்டில் வழிவகை செய்யப்படாத இனங்களுக்கு ஒப்புதல் அளிக்க நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் அனுமதி வேண்டி கடிதம் அனுப்பவும் தனி அலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட பணிகள் அனைத்தும் அரசால் விடுவிக்கப்பட்ட தொகைக்குட்பட்டு வருவதால் கூடுதல் பணிகள் செய்ய அனுமதிக்கலாம்.

தனி அலுவலர் (மற்றும்)
ஆணையாளர்,
கொமாரபாளையம் நகராட்சி.